(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 403.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 28, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2581/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

மாவட்ட வாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டுள்ள மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டினுள் வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடிய இயலுமை காணப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3243/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) ஸ்ரீ லங்கா ரெலிகொம் லிமிரெட் தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையான இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களைக் கொண்டுள்ளதா அல்லது குறை ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலப் படுகடன், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3688/ '13

3.

கௌரவ அனுர திஸாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2011 மற்றும் 2012 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குமென ஒரு அரச நாடக விழாவே நடாத்தப்பட்டதென்பதையும்;

(ii) ஆண்டுதோறும் நடாத்தப்படவேண்டிய மேற்படி விழா, மேலே குறிப்பிடப் பட்டுள்ளவாறு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்பட்டமைக்கு நிதி இன்மையே காரணமாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடாத்தப்பட்ட அரச நாடக விழாவுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச அனுசரணையுடன், தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கேற்றக்கலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட "மஹ சமயம" நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை கிடைத்த விதம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சியின் ஒவ்வொரு நடவடிக்கைக்கெனவும் குறித்த பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3919/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மா, வாழை, பப்பாளி போன்ற பழங்களை நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்கும் விரைவாக பழுக்க வைப்பதற்குமாக சில வர்த்தகர்கள் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்களின் விஞ்ஞான, இரசாயன மற்றும் வர்த்தகப் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி இரசாயனப் பொருட்களில் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழங்களை பழுக்க வைப்பதற்காகவும் நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்காகவும் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற வர்த்தகர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கப்பட்ட அத்தகைய வர்த்தகர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களில் தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4164/ '13

5.

கௌரவ பி. ஹரிசன்,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத மருத்தவர்கள் உள்ளடங்கும் வகுதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு வகுதிக்கும் உரிய மருத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த வகுதிகளிலுள்ள பொது வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் ஆயுர்வேத திணைக்களத்தினால் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள மொத்த உடல் பிடித்துவிடும் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கை மற்றும் அவற்றின் முகவரிகள் மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) ஆயர்வேத திணைக்களத்திற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களினால் உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கான உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பின், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆயுர்வேத உடல் பிடித்துவிடும் நிறுவனமொன்றை நடாத்துவதற்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தொழில்சார் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறானதொரு நிலையமொன்றை நடாத்தும் இடமொன்றில் இருக்க வேண்டிய தரநியமங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4294/ '13

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) டெங்கு நோயாளர்களுக்கு வைத்தியசாலைகளில் வழங்கப்பட்ட டெக்ஸ்ரன் 40 (DEXTRAN 40) என்ற சேலைன் வகையை இறக்குமதி செய்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி சேலைன் வகையின் தரம் பற்றி ஏதேனும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) 2013 சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலத்தினுள் மேற்படி சேலைன் ஏற்றப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி சேலைன் வகை பற்றிய முறைப்பாடுகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4558/ '13

7\.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வீடொன்று இல்லாத, குறைந்த வருமானம் பெறும், வெளிநாட்டில் தொழில்புரிகின்ற ஊழியர்களுக்காக "ரட்டவிருவோ கடன் திட்டம்" என்ற பெயரில் வீடமைப்புக் கடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கடனை வழங்குகின்ற வங்கி யாது;

(iii) நாட்டினுள் இயங்கி வருகின்ற அந்த ஒவ்வொரு வங்கிக் கிளைகளினதும் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி கடன் திட்டம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர் வூட்டுவதற்கு மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏனைய நிருவாக நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவு எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் தொகையொன்றை பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் தகைமைகள் யாவை;

(ii) ஒருவருக்கு வழங்கப்படும் கூடியபட்ச கடன் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி கடன் தொகைக்காக அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவு;

(iv) இதுவரை மேற்படி கடன் தொகைக்கு விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4735/ '14

8\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தற்போது பயிற்சி பெறுகின்ற ஆசிரிய மாணர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் யிற்சிகளுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வேறு பாடங்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றதா என்பதையும்

(iv) ஆமெனில், அப்பாடங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மஹரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களுக்கு வதிவிட வசதிகள் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அண்மையில் மேற்படி கல்லூரியின் கட்டிடங்கள் திருத்தப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(v) மேற்படி திருத்த வேலைகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4743/ '14

9.

கௌரவ அசோக் அபேசிங்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இன்றளவில் இலங்கை மின்சார சபைக்கு திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை மின்சார சபை வர்த்தக வங்கிகளிலிருந்து கடன் பெற்றுக் கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இலாபமோ அல்லது நட்டமோ இல்லாத நிலையில் இலங்கை மின்சார சபையை பேணிவருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4945/ '14

10.

கௌரவ ஆர். எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின், மடுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் அப்போதைய ஆற்றுப்படுகை அபிவிருத்திச் சபைக்கு உரித்தானதாக காணப்பட்ட "பதுளுவெல பாதுகாக்கப்பட்ட வனத்தில்" சுமார் 50 – 60 வருடங்கள் பழைமைவாய்ந்த தேக்குமரப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றதென்பதையும்;

(ii) குறிப்பிட்டதொரு ஆள் போலி ஆவணங்களைத் தயாரித்து மேற்படி காணியை சொந்த அறுதி உரித்துடைய காணியாக அனுபவித்து வருகின்றார் என்பதையும்;

(iii) ஒரு சில ஆட்கள் அரசாங்கத்திற்கு சொந்தமான மேற்படி தேக்கு மரப் பயிர்ச் செய்கையை அழித்து வருகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பல வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வந்துள்ள பதுளுவெல பாதுகாக்கப்பட்ட வனத்தின் தேக்குமரக் காட்டை அத்துமீறியோர்களிடமிருந்து பாதுகாப்பதற்கான துரித நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4960/ '14

11.

கௌரவ நிரோஷன் பெரேரா,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்பகு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கடற்றொழில் அமைச்சின் மூலம் மீனவர்களுக்கு படகுகள் வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி படகுகள் வழங்கப்பட்ட மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு படகு வகையின் பொருட்டும் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மீனவர்களுக்கு வழங்கப்படும் மேற்படி படகு வகைகள் மற்றும் அவற்றின் விலைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி படகொன்றின் உற்பத்திச் செலவு ஒவ்வொரு படகு வகை ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) வடமேல் மாகாண சபையின் மூலம் 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்கும் வருடாந்தம் வழங்கப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4962/ '14

12.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த ஆண்டு உர மானியம் வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பயிர் வகைகளுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உர மானியத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தொடக்கம் வழங்கப்பட்ட ரூபா 350/- உரப் பொதியொன்றுக்கு ரூபா 150/- காப்புறுதித் தொகையாக மேலதிகமாக அறவிடப்பட்டதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மானியத்தின் கீழ் வழங்கப்படும் ஓர் உரப்பொதிக்காக ரூபா 150/- மேலதிகமாக அறவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதியின் அடிப்படை யாது;

(iii) மேற்படி காப்புறுதி ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி காப்புறுதியின் கீழ் உரிமைக் கோரல்களுக்காக நிறைவு செய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5084/ '14

13.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு, துணுக்காய், உயிலங்குளம் 50 வீடமைத் திட்டத்தில் குடியமர்ந்துள்ளவர்களுக்காக குடிநீர் வசதிகள் இல்லையென்பதையும்;

(ii) இதனால் மேற்படி வீடமைப்புத் திட்டத்தின் குடியிருப்பாளர்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி திட்டத்தில் குடியமர்ந்துள்ளவர்களின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5196/ '14

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்சமயம் இயங்கும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த மின் உற்பத்தி நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையங்கள் தாபிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிர்மாணிப்புகளுக்குத் தேவையான காணிகளை பெற்றுக்கொள்ளும் முறையியல் யாதென்பதையும்;

(vi) நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vii) இது இலங்கையின் மின்சாரத் தேவையில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5226/ '14

15.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014.05.27 ஆம் திகதி இரத்மலான, அத்திடிய பிரதேசத்தில் சந்தைக்கு வழங்குவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த ரூபா 50 கோடிக்கும் அதிகமான பெறுமதியைக்கொண்ட காலாவதியான மருந்துகள் நுகர்வோர் அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மருந்துகள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியம் எந்த மருந்துக் கம்பனிக்குச் சொந்தமானது என்பதையும்;

(ii) அக்கம்பனியின் பதிவு இலக்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி மருந்துத் தொகையில் உள்ளடங்கியிருந்த மருந்து வகைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014.05.27 ஆம் திகதியளவில் மேற்படி காலாவதியான மருந்துத் தொகையில் ஓரளவு மருந்துகள் சந்தைக்கு வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மருந்துக் கம்பனிக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட மூன்றாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஒற்றோபர் 24) [1].

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 15.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 17.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 18.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 19.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 20.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 21.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 22.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---